28th September 1961]

New Industries.

* 1890-C Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தில் நமது ராஜ்யத்தில் புதிதாக தொழிற்சாலைகள் ஆரம்பிக்க எவ்வளவு ஒதுக்கப்பட்டுள்ளது ?

(இ) சிறிய தொழிற்சாலைகள் என்னென்ன? எத்தனை ? ஜில்லா வாரியாக?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The financial provision made for large scale and medium industries and small-scale industries for the Third Five-Year Plan of Madras State is as follows :—

	Provision for 1961–66. (RUPEES IN LAKHS.)
Large scale and medium Industries	210
Small-scale Industries	800

(இ) A district-wise list [a] of small-scale industries proposed to be started during the Third Five-Year Plan is placed on the table of the House.

SRI J. MATHA GOWDER : இந்த அறிக்கையில் மூன்ரு வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எல்லா மாவட்டங்களிலும் தொழில் பேட்டை வைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றி நீலகிரியில் இல்லை. கூனூரில் அது வைக்கக்கூடிய நிலைமை, வசதி எல்லாம் இருக்கின்றன. அதை வைக்க வேண்டுமென்று அங்குள்ளவர்கள் எழுதி இருக்கிருர்கள். அதைப்பற்றி பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழில்பேட்டை வைக்க வேண்டுமென்று எழுதி இருந்தால் தொழில்பேட்டை வைத்தால் நல்ல முறையில் நடக்குமா, நல்ல முறையில் அது பயன்படுமா என்பதை கவனித்துத் தான் சொல்ல முடியும். அதைப்பற்றி அவ்வப்போது பரி சீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : பெரிய தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பதாக இருந்தால் அதற்கு அதிகப்படியான தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினுர். அந்த முறையில் தொகை ஒதுக்குவதாக இருந்தால் சர்க்கார் துறையில் ஆரம் பிக்கும் பேட்டைக்கு எவ்வளவு பங்கு தொகையும் தனியார் துறையில் ஆரம்பிப்பதாக இருந்தால் அதற்கு எத்தனை பங்கு தொகையும் ஒதுக்கப் படும் என்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு தனி யாகக் கேள்வி போட வேண்டும்.

Industries (Central and State)

DEPUTY SPEAKER : As the hon. Member, who gave notice of Question No. 1890-D is not in his seat, the question and answer will be printed in the proceedings.

* 1890-D Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் (1) மத்திய சர்க்காரால், (2) மாநில சர்க்கா ரால் நடத்தப்படும் பெரிய, மத்தியதர தொழிற்சாலைகள் எத்தனை ?

---

a Printed as Appendix V on pages 306–308 infra.